செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
सत्यमेव जयते

## சுவடியியல் புலம்

நடத்தும்

# மூலபாட ஆய்வு நெறிமுறைகள்

## பயிலரங்கம் - 7

**(05.10.2021 – 11.10.2021)**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழில் ‘பாடம்’ என்ற சொல் வழக்கு உரையாசிரியர்கள் காலந்தொட்டு வழங்கி வருகிறது. இச்சொல் மூலநூலாசிரியர் எழுதிய பாடத்தைக் குறித்து நிற்கிறது. மூலநூலாசிரியர் எழுதிய பாடத்தை ‘மூலபாடம்’ என்று அழைப்பது மரபாகும். மூலபாடத்தில் ஏற்படுகின்ற பாடவேறுபாடுகளைக் கண்டறிந்து, பாடங்களின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிதலாகிய முறை மூலபாட ஆய்வுமுறை எனப்படுகிறது.

மூலபாடத்தில் ஏற்படுகின்ற பாடவேறுபாடுகளுக்குப் பல்வேறு காரணிகள் உள்ளன. அவற்றுள் முக்கியப் பங்காக அமைவது எழுதப்படும் பொருள்களாகும். நிலையற்ற தன்மை கொண்ட ஓலை, தாள் ஆகியவற்றில் எழுதப்படுகின்ற மூலபாடங்களை நீண்டகாலம் பாதுகாக்க வேண்டிய தேவையில் அதிலிருந்து மீண்டும் மீண்டும் படியெடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. கல்விப் புலத் தேவை கருதியும் ஒருவரிடமிருந்து இன்னொருவர் அவரிவரிடமிருந்து மற்றொருவர் எனப் படியெடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

காலந்தோறும் படியெடுத்தல் எனும் சங்கிலித்தொடரில் மூலபாடத்தில் பல்வேறு பாடவேறுபாடுகள் ஏற்பட்டுவிடுகின்றன. படியெடுத்தல் வழக்கினால் சுவடிக் குடிவழி மரபொன்று உருவாகிவிடுகின்றது. பாடவேறுபாட்டாய்வுக்குச் சுவடிக் குடிவழி மரபு பெரும் பங்காக அமைகிறது. மூல நூலில் ஏற்பட்டுவிடுகின்ற பாடவேறுபாடுகள்

பல்வேறு நிலைகளில் பகுத்து நோக்கத் தக்கதாய் அமைந்துள்ளன. இவற்றைக் களைவதற்குரிய முயற்சி உரையாசிரியர்கள் காலந்தொட்டே நடைபெற்றிருக்கின்றன; பதிப்பு மரபிலும் இதற்கான பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரையாசிரியர்களின் 'பொருந்தாப் பாடம்', ஆசிரியரின் பாடமன்று', 'பிழை பாடம்' முதலான சொல்லாடல்கள் மூலபாட ஆய்வு நெறிமுறைகளாகக் கொள்ளத்தக்கனவாகும். அச்சுப் பதிப்பாசிரியர்கள் பிற இலக்கண, இலக்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்த முயற்சியும், ஒன்றிற்கு மேற்பட்ட சுவடிகளை ஒப்புநோக்கி ஆராய்ந்த தன்மையும், தக்க அறிஞர்களின் கருத்தை அறிந்து மூலபாடத்தை உறுதி செய்த வழக்கமும் மூலபாட ஆய்வு நெறிமுறைகளாகக் கருதத்தக்கனவாகும்.

-------------------

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் செவ்வியல் நூல்களாக வரையறுத்துள்ள தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் தமிழ் நூல்களுக்கும் செம்பதிப்பை உருவாக்கும் அரிய முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. செம்மொழி நிறுவனச் செம்பதிப்பு ஆக்கத்திற்கு மூலபாட ஆய்வு முறையைக் கைக்கொள்வது இன்றியமையாத தேவையாக அமைகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டு **'மூலபாட ஆய்வு நெறிமுறைகள்'** என்னும் பொருண்மையிலான இப்பயிலரங்கைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சுவடியியல் புலம் ஒருங்கிணைத்து நடத்தவுள்ளது. இத்துறை சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

இப்பயிலரங்கமானது மூலபாட ஆய்வு நெறிமுறைகளை எடுத்துரைக்கும் வகையில் பதிப்புத்துறை சார்ந்த அறிஞர்களைக் கொண்டு 05.10.2021 முதல் 11.10.2021ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 05.10.2021 முதல் 11.10.2021 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 29.09.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 30.09.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

நிழற்படம்

## மூலபாட ஆய்வு நெறிமுறைகள்

**<u>பயிலரங்கம்</u>**

**(05.10.2021 – 11.10.2021)**

## விண்ணப்பப் படிவம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | | | | | | |
| | | ஆங்கிலம் | | | | | | |
| 2. | பதவி/பணிநிலை | | | | | | | |
| | நிரந்தரம்/தற்காலிகம் | | | | | | | |
| 3. | பிறந்த நாள்/ வயது | | | | | | | |
| 4. | பாலினம் | | | | | | | |
| 5. | வகுப்பு (✓ செய்க) | | பொது | | இ.பி.வ. | | பட்டியல் இனத்தவர் | |
| 6. | கல்வித் தகுதிகள் | | | | | | | |
| 7. | பணியில் சேர்ந்த நாள் | | | | | | | |
| 8. | நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | | | | | | |
| 10. | புலன எண் | | | | | | | |
| 11. | சிறப்பறிவு பெற்றுள்ள துறை | | | | | | | |

| | | |
|---|---|---|
| 12. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | |
| 13. | தாங்கள் பணியாற்றும் கல்வி நிறுவனம் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 2 (F) மற்றும் 12 (B) அங்கீகாரம் பெற்றுள்ளதா? ஆம் / இல்லை ஆம் எனில் விவரம் தரப்படல் வேண்டும் | |

நாள் :

(கையொப்பம்)

இடம்:

**உரிய முத்திரையுடன்**
**முதல்வர்/ பதிவாளரின் கையொப்பம்**